May I know whether Government have taken the assistance of Central Government to find out particularly inter-State gangsters involved in this; and if so, the action taken thereupon and details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதிலே 'இன்டர்-ஸ்டேட் காங்ஸ்டர்ஸ்' இருக்கிறார்களா என்பதற்கு இந்தக் குறிப்பிட்ட வழக்கைப் பொறுத்த வரை எதுவும் இல்லை. இதைப் பொறுத்த வரையில் இது மிகச் சாதாரணமான, சிறிய அளவிலே செய்யப்பட்ட ஒரு மோசடியாகும். அவர்கள் இரண்டு உண்மையான ஐந்து ரூபாய் நோட்டுக்களிடையே வைத்திருந்தது 131 போலிக் காகிதங்கள். ஐந்து ரூபாய் என்று அச்சடிக்கப்பட்ட போலிக் காகிதங்கள் தான் இருந்திருக்கின்றன. 'இன்டர்-ஸ்டேட்' அளவில் நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவைப்படுகிற நேரத்தில் கோரப்படும்.

*890. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் கோவை திருப்பூரில் கள்ள நூறு ரூபாய் நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 25—1—1972 அன்று கோவை மாவட்டம், திருப்பூரில் உள்ள இந்திய ஸ்டேட் வங்கியில் ஒருவர் ரூ. 25,000 செலுத்தியபோது அந்த வங்கியின் காசாளர், அந்த நபர் செலுத்திய ரூபாய் நோட்டுக்களில் ஒரு நூறு ரூபாய் கள்ள நோட்டிருப்பதைக் கண்டு பிடித்தார். திருப்பூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பின்னர், இவ் வழக்கு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பொதுவாகவே நம்முடைய தமிழகத்தில் பல இடங்களில் இம்மாதிரியாக கவுன்டர்பீட் நோட்டுகள் ஆங்காங்கு செய்வதாக செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆகவே, இந்த விஷயமாக பல ஆண்டுகளாக ஒரு பெரிய பிரச்சினை இருந்து கொண்டிருப்பதால், இது பொது மக்களை மிகப் பயங்கரமாகப் பாதிக்கக்கூடிய அளவில் வளரக்கூடிய ஒரு நிலைமை இருப்பதால் அரசாங்கம் இதுபற்றி பொதுவாகக் கடுமையான நடவடிக்கை எந்த அளவிற்கு எடுத்திருக்கிறது என்கிற விவரங்களை முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

1972 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் குற்றங்களெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இதில் முந்தைய ஆண்டு களை விட இப்பொழுது அதிக அளவில்கூட இந்தக் கள்ளநோட்டு வழக்கு களில் பல பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பல வழக்குகள் நடை பெற்றுக் கொண்டும் இருக்கின்றன. இதிலே இன்னும் கடுமையாக சட்டத்தைத் திருத்துகிற அளவுக்குத் தண்டனை அவர்களுக்கு அளிப்பதற்கு என்ன செய்ய லாம் என்பதை வேண்டுமானால் அரசு யோசிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்படி கள்ளநோட்டு ரூபாய் அச்சடிப்பதில் சாதாரணமானவர்கள் ஈடுபடவில்லை. பெரும் பணக்காரர்கள் தான் ஈடுபடுகிறார்கள். சமீபத்தில் இப்படிப்பட்ட வழக்குகளில் சேலம் மாவட்டத்தில் உள்ள முன்னாள் அமைச்சர் ஒருவரின் மாமனார் திரு. ரத்தின வேல் கவுண்டர் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் வந்தன. அரசாங்கம் அதில் என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப்பற்றிய தகவல் ஏதும் இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த கள்ள நோட்டுகள் எல்லாம், காகிதத்தில் நோட்டுகள் அச்சிடப்படுவதால், எல்லோரும் சுலபமாக அடித்து விடுகிறார்கள். ஆகவே, 100 ரூபாய், 1,000 ரூபாய் நோட்டுகளை அச்சடிப்ப தற்குப் பதிலாக உலோகங்களில் அதாவது தங்கத்தில் அச்சடித்தால் இந்தப் பிரச்சனைகள் இருக்காது. அதைப் பரிசீலனை செய்ய மத்திய அரசை நமது மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 100 ரூபாய்களை எல்லாம் தங்கத்தில் வெளியிட்டால் பிறகு 10 ரூபாய் 1 ரூபாய் நோட்டுகளில், கள்ளநோட்டு அச்சிடத் தொடங்கி விடுவார்கள். ஆகவே இந்த முறை பிரச் சனைகளைத் தீர்ப்பதாகாது.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, கள்ளநோட்டு அச்சடிப்பவர்களை அரஸ்டு செய்து, ஜெயிலில் பி-கிளாசில் வைத்து நல்ல சௌகரியங்கள் செய்து கொடுக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் அவர்களுக்கு ஜெயிலில் கடுமையான வேலை கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு இதுபற்றி பதில் சொல்லியிருக்கிறேன் இதிலே கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்தைத் திருத்துவதைப்பற்றி யோசனைச் செய்யலாம்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, கள்ளநோட்டுகளை அச்சடிப்பவர்களுக்கு இயந்திரமும் காகிதமும் எங்கே இருந்து வருகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த விபரங்களை அறிய உறுப்பினர் அவர்கள் ஏன் ஆர்வம் காட்டுகிறார் என்று தெரியவில்லை. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

Employees transferred from Travancore–Cochin

* 891 Q.—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether all the conditions of service applicable prior to 1–11–1956 to Travancore–Cochin transferred personnel in respect of G.O. Ms. No. 2865, dated 21–12–1970 have been implemented; and

(*b*) whether promotions were given on strict seniority irrespective of age restriction?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) நிபந்தனைகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

(இ) விதிகளின்கீழ் பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் இணைந்து சுமார் 16 ஆண்டுகள் ஆகியும், இதுவரையிலும் அரசு அலுவலில் இருந்தவர்களுக்கு சர்விஸ் இணைப்பு பல இலாக்காக்களில் நடை பெறவில்லை. ஆகவே, இதற்குத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்து சரியான முறையில் சர்விஸ் இணைப்பு அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எல்லாத் துறைகளிலும் சேர்ந்து தமிழ்நாடு முழுவதும் 7,430 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 30 பேர் தலைமைச் செயலகத்தில் இருக்கிறார்கள். எல்லோருக்கும் தகுதியின் அடிப் படையில் பதவி உயர்வுகள் முறைப்படி அளிக்கப்பட்டு வருகின்றன. ஒருசில துறைகளில் மட்டும் பதவி உயர்வு அளிப்பது இன்னும் முடிவுபெறவில்லை. வேறு பிரச்சனைகள் இதில் அதிகமாக இல்லை.